# . . . நன்மையைத் தருவேன். ஆதி 45: 18,20

**உங்கள் தட்டு முட்டுக்களைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம்.**

**நான் உங்களுக்கு எகிப்து தேசத்தின் நன்மையைத் தருவேன்.**

தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். தேவ சமாதானம் கிடைக்கும்.

தட்டு முட்டு சாமான்களைக் குறித்து கவலைக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, எகிப்து தேசத்தின் நன்மையைத் தரப்போகும் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

**பிலிப்பியர் 4 : 6 சொல்கிறது;**

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை, ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.

**எகிப்தின் நன்மை யாவை ?**

**தானியேல் 11 : 43 சொல்கிறது;**

எகிப்தினுடைய பொன்னும், வெள்ளியுமான ஐசுவரியங்களையும், உச்சிதமான எல்லா வஸ்துக்களையும் ஆண்டு கொள்வான் என்பதாக.

**அப்படியானால் பொன், வெள்ளி வஸ்துக்கள் – தான்**
**எகிப்தின் நன்மை எனப் பொருள்படுகிறது.**

**ஆனால், பிலிப்பியர் 4 : 6** இதைவிட மேலான நன்மையை வெளிப்படுத்துகிறது. அதுவே ‘‘**தேவ சமாதானம்**’’

**பக்தன் பாடுகிறார் . . .**

பொன் வெள்ளியுமோ பெரும் பேர் புகழோ
பண ஆஸ்தியும் வீணல்லவோ!
பரலோகத்தின் செல்வமே, என் அருள் ஏசுவே
போதும் எனக்கு நீரே! –ஆமென்.

பரலோகத்தின் செல்வம், அருள் ஏசு சொன்னார்.
‘என்னுடைய சமாதானத்தையே வைத்துப் போகிறேன்’ – என்பதாக.

**இந்த தேவ சமாதானத்தை எப்படி பெற்றுக் கொள்வது ?**

**1. முதலாவது, ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்.**

**மத்தேயு 6 : 27 ல் இயேசு சொல்கிறார்.**

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான் ? – என்பதாக.

**மேலும் இயேசு சொன்னார்:**

**மத்தேயு 6 : 34** நாளைக்காக கவலைப்படாதிருங்கள்.

**மத்தேயு 6 : 31** என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்.

**மத்தேயு 10 : 19** என்னத்தைப் பேசுவோம் என்று கவலைப்படாதிருங்கள்.

**மத்தேயு 6 : 25** உங்கள் ஜீவனுக்காகவும், உங்கள் சரீரத்திற்காகவும் கவலைப்படாதிருங்கள். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும் என்றார் அல்லேலூயா.

**1 பேதுரு 5 : 7** இயேசு உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் இயேசுவின்மேல் வைத்துவிடுங்கள் – என்பதாக.

**2. இரண்டாவது, எல்லாவற்றையும் குறித்ததான விண்ணப்பம்.**

**லூக்கா 10 : 41 –இல் இயேசு சொன்னார்.**

மார்த்தாளே, மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்படுகிறாய் – என்பதாக.

ஆம் சகோதரனே, சகோதரியே கவலைப்படுகிற எல்லாவற்றையும் ஜெபவிண்ணப்பமாக ஒரு தாளில் எழுதுங்கள்.

**3. மூன்றாவதாக, ஸ்தோத்திரத்தோடே**

**1 தெசலோ. 5 : 18 சொல்கிறது:**

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள் – என்பதாக. ஆதலால் ஒவ்வொன்றிற்காகவும் தேவனைத் துதியுங்கள்.

**4. நான்காவதாக ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும்**

**1 தெசலோ 5 : 17 சொல்கிறது:**

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் – என்பதாக.

**5. ஐந்தாவது தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.**

ஆம் சகோதரனே, சகோதரியே தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். நண்பரிடத்தில் சொன்னது போதும், உறவினரிடத்தில் சொன்னது போதும், இனிமேல் "தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்."

இன்று நாம் அநேக நேரத்தில் தேவனுக்குத் தெரியப்படுத்த மறந்துவிடுகிறோம். தயவுசெய்து, இன்றே ஜெபத்தோடு தீர்மானியுங்கள்.

**வேதம் சொல்கிறது,**

தேவனைக் கண்டடையத்தக்க சமயத்தில் தேடுங்கள் என்பதாகவும், அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள் என்பதாகவும் கூறுகிறது.

**ஆதலால் தேவனைக் கண்டடையத்தக்க சமயம் அதிகாலை என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.**

தயவுசெய்து, அதிகாலை எழும்பியவுடன் ஆவியானவர் உங்கள் உள்ளத்தில ஜெபிக்க தூண்டும் குறிப்புகளை அப்படியே ஒவ்வொன்றாக, ஸ்தோத்திரத்தோடு தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். மனுஷரிடத்தில் சொல்வதை குறையுங்கள். தேவனிடத்தில் ஜெபிப்பதைக் கூட்டுங்கள்.

மனுஷரிடத்தில் சொல்வது கண்ணியை வருவிக்கும். தேவனிடத்தில் ஜெபிப்பது ஜெயத்தைக் கொடுக்கும்.

அன்பரே, தயவு செய்து "**தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.**" **தேவனுக்குத் தெரியப்படுத்துவதால் லாபம் என்ன ?**

எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் கிடைக்கும்.

**தேவ சமாதானம் எப்படிப்பட்டது ?**

எல்லாப் புத்திக்கும் மேலானது.

**தேவசமாதானம் செய்யும் காரியம் என்ன ?**

உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.

**வேதம் சொல்கிறது:**

உன் இருதயத்தை எல்லாக் காலலோடும் காத்துக்கொள். அப்பொழுது, அதினின்று 'ஜீவ ஊற்று' புறப்படும் – என்பதாக.
அப்படியானால், தேவ சமாதானம் நம்முடைய இருதயத்தை கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்கிறது.
என் அன்பு சகோதரனே, சகோதரியே,

இந்த மேலான "**தேவ சமாதானம்**" – உங்களுக்கு வேண்டாமா ?

ஆதலால், நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லா வற்றையும் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை, ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

**உங்கள் தட்டு முட்டுகளைக் குறித்து கவலைப்பட வேண்டாம்.**
**நான் உங்களுக்கு எகிப்து தேசத்தின் நன்மையைத் தருவேன்.**